கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 14.08.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு முகாம் - 2024

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேலைவாய்ப்பு முகாம் - 2024 ஆகஸ்ட் 8 மற்றும் 9 தேதிகளில் மாணவர் நல மையத்தின் சார்பாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பட்டமளிப்பு விழா அரங்கத்தில் நடைபெற்றது.

மாணவர் நல மையத்தின் முதன்மையர் முனைவர். நா. மரகதம், வரவேற்புரை வழங்கினார். அவர் தனது உரையில், இவ்வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள வருகை புரிந்துள்ள நிறுவனங்களை வரவேற்று அவர்கள் பல்கலைக்கழகத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையினை பாராட்டினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமானது வேளாண் அறிவியல் கல்வியில் முன்னோடியாக திகழ்வதோடு தேசிய அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளதை சுட்டிக்காட்டினார். மாணவர்களின் கல்வி மற்றும் தொழில் தொடர்பான திறன்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை அவர் கோடிட்டுக் காட்டினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர். இரா.தமிழ்வேந்தன், துவக்க உரையை ஆற்றி, வேலைவாய்ப்பு முகாம் 2024-ஐ வெற்றிகரமாக நடத்துவதற்கு உதவி புரியும் நிறுவனங்களை பாராட்டினார். மேலும் பல்கலைக்கழகத்தின் வேலைவாய்ப்பு முகாமிற்கு கலந்து கொள்ள வந்திருக்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உறுப்பு கல்லூரி மாணவர்களை உற்சாகப்படுத்தியதோடு அவர்களின் அறிவு மற்றும் கற்றல் திறன் மேம்பாடு அடிப்படையில் பொருத்தமான வேலையைப் பெறவும் ஊக்குவித்தார். மாணவர்கள் தங்களுக்கு கிடைக்கக்கூடிய அரிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி முன்னேறுவதற்கு இப்பல்கலைக்கழகம் சிறந்த முன்னோடியாக திகழ்வதாக எடுத்துக்கூறினார். இவ்வேலைவாய்ப்பு முகாம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களை அரசு, தன்னார்வ தொண்டு நிறுவனம், சேவைத் துறை, வங்கி, தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெறுவதற்கு பெரிதும் உதவுகிறது என்று அடிக்கோடிட்டார்.

மேனாள் பேராசிரியர் முனைவர் ஐ.வெங்கிட் பிரபு அவர்கள் 2024-ஆம் ஆண்டிற்கான இவ் வேலைவாய்ப்பு முகாமை நடத்துவதற்கான முக்கியத்துவம் குறித்து விளக்கினார். மேலும் மாணவர்கள் தங்களின் விண்ணப்பம் தயாரிப்பது, பொதுவிவாதத்தில் பங்கேற்பது, தனிப்பட்ட நேர்காணலில் கலந்து கொள்வதற்கு ஏற்ப பயிற்சி வகுப்புகள் மாணவர் நல மையத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

உதவி வேலைவாய்ப்பு ஆலோசகர் முனைவர். ச.கவிதா அவர்கள் நன்றியுரை நல்கினார். அவர் தமது உரையில் இவ்வேலை வாய்ப்பு முகாமிற்கு அனைத்து ஏற்பாடுகளுக்கும் பேருதவியாக இருந்த பேராசிரியர்கள் முனைவர்.மு.முத்துலட்சுமி, முனைவர்.கு.ம.செல்லமுத்து, முனைவர்.கி.தங்கராஜ் மற்றும் முனைவர்.சி.பிரதிபா, உதவி ஆசிரியர் ஆகியோர்களுக்கு மாணவர் நல மையத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இம்முகாமில் கலந்து கொண்ட நிறுவனங்கள் அந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம், வேலையின் தன்மை, ஊதியம் முதலியவற்றை படத்தொகுப்புகள் மூலம் மாணவர்களுக்கு விளக்கினர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**